Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்ககால கட்டிடங்களில் ஓவியங்களின் பங்கு

பொ.ஸ்டுபர்ட் சிபி
உதவிப் பேராசிரியர், கட்டிடக்கலை துறை
கட்டிடக்கலை மற்றும் திட்டமிடுதல் புலம்
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, தமிழ்நாடு
**stubertsibi@gmail.com**

82

ஆய்வு நோக்கம்
சங்ககால கட்டிடங்களில் ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன என்பதை குறித்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுச் சுருக்கம்
தமிழர்களின் நாகரீகத்தை பறைசாற்றும் சங்க இலக்கியங்களே தமிழர்களின் வரலாற்று சான்றுகளாகும். சங்ககால தமிழர்கள் மண், மரம், சுதை போன்ற அழியும் பொருள்களால் ஆன கட்டிடங்களை கட்டினார்கள் அவை வீடுகள், அரண்மனைகள், கோவில்கள் என பல்வேறு வகையாக இருந்துள்ளது. இவைகள் அனைத்திலும் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளது. குறிப்பாக அனைத்து வீடுகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன வீடுகளில் பெண்களும் ஓவியங்கள் வரைந்துள்ளார்கள். அரண்மனைகளை அழகுபடுத்தும் நோக்கில் சுவர்களிலும் விதனங்களிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன அதுபோல மக்கள் பார்பதற்காக வெளிப்புற சுவர்களிலும் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளது. கோவில்களில் ஓவியங்கள் வரைந்து அதை வழிபட்டுள்ளார்கள் அதுபோல பக்தர்களுக்காக சித்திர சாலைகளையும் அமைத்துள்ளர்கள். இவ்வாறு சங்ககால கட்டிடங்களில் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளது.

திறவுச் சொற்கள்: ஓவியங்கள், சுவரோவியங்கள், கட்டிடங்கள், சித்திர சாலை, சங்ககாலம்.

## முன்னுரை

வரலாற்று காலத்திற்கு முன்பிருந்தே கவின்கலைகளான கட்டிடக்கலை சிற்பக்கலை ஓவியக்கலை போன்ற அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இணைந்து வளர்ந்து வந்துள்ளன . சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் என்பது பழமொழி அதன் அடிப்படையில் கட்டிடக்கலை ஓர் அடிப்படையான கலையாகவும் அதை அழகுபடுத்துவதற்காகவோ அல்லது தகவல் பரிமாற்றத்திற்காகவோ கட்டிடத்தின் பரப்பில் சிற்பக்கலையும் ஓவியக்கலையும் இடம் பிடித்து வளர்ந்து வந்துள்ளது . தமிழர்களின் வரலாற்று தரவுகளான சங்க இலக்கியப் பாடல்களில் இது தொடர்பான செய்திகள் இடம் பிடித்துள்ளன.

## கட்டிடக்கலை

கட்டப்படுவது கட்டிடம் என்று அழைக்கப்படுகிறது. கட்டு + இடம் கட்டிடம் ஆகும். இதனை கட்டப்பட்ட இடம் என்று பொருள் கொள்ளலாம். சென்னைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேரகராதி கட்டிடத்தை கட்டடம் என்று குறிப்பிடுகிறது. எனவே இது கட்டிடம் என்றும் கட்டடம் என்றும் அழைக்கப்படுகின்றது. கட்டிடங்களின் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கலை கட்டிடக்கலை ஆகும். இந்த கட்டிடக்கலையில் புலமை பெற்றவர்கள் கட்டிடக் கலைஞர் என்று அழைக்கப்படுகிறார்கள். சங்ககாலத்தில் நாலறிப் புலவர் எனும் நான்கு வகை திசைக ளையும் அதன் பலன்களையும் அறிந்த கட்டிடக்கலை வல்லுநர்கள் இருந்துள்ளார்கள். இவர்கள் மன்னர்களுக்காக மனைகளை கட்டினார்கள் என்பதை நெடுநல்வாடை பாடல்கள் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

“நாலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டு
தேயங் கொண்டு தெய்வ நோக்கிப்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பெரும்பெயர் மன்னர் கொப்ப மனைவகுத்து"

(நெடுநல் வரி - 76-78)

சங்ககால அரசர்கள் பல்வேறு வகையான கட்டிடங்களை கட்டினார்கள். கடைச் சங்க காலத்தின் இறுதியில் சோழன் செங்கணான் எனும் அரசன் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் எழுபதுக்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டினார்.

'இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ ளீசற்கு

எழில்மாடம் எழுபதுசெய் துலக மாண்ட

திருக்குலத்து வளச் சோழன்''

என்று, எழுபது கோவில்கள் கட்டப்பட்டதை திருமங்கையாழ்வார் கூறுவதிலிருந்து அறியலாம்.

கட்டிடங்களில் ஓவியங்கள்

சங்க கால இலக்கியங்கள் ஓவியத்தை ஓவம், ஓவச் செய்தி போன்ற பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றது. அதுபோல ஓவியம் வரையும் ஓவியர்களை கண்ணுள் வினைஞர் என்று குறிப்பிடுகின்றது.

ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர்

(பதிற்றுப்பத்து.88 : 28)

ஓவத் தன்ன இடனுடை வரைப்பின்

(புறநானூறு. 251 : 1)

ஓவத் தன்ன வினைபுனை நல்லில்

(அகநானூறு. 98 : 11)

சங்க இலக்கியங்கள் பல்வேறு வகையான கட்டிடங்களை பற்றி குறிப்பிடுகின்றது எனினும் அவை அனைத்தும் செங்கற்கள், மரம், சுதை போன்ற அழியும் பொருள்களால் கட்டப்பட்ட செங்கல் கட்டிடங்களே ஆகும். செங்கல் கட்டிடங்களின் ஆயுள் காலம் சுமார் இருநூறு ஆண்டுகள் முதல் முந்நூறு ஆண்டுகளே, எனவே சங்ககால கட்டிடங்கள் ஈதுவும் தற்பொழுது காணக்கிடைக்கவில்லை. சங்ககாலத்து தமிழ்க் கோயில்கள் அனைத்தும் செங்கல்களால் கட்டப்பட்டவை என்று கூறுவதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. இதற்கு எட்டுத் தொகை நூலாகிய அகநானூற்றில் பெரும்புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ள ஒரு பகுதி சான்றாக அமைகிறது.

இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென .

மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து

எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று

ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை

அகநானூறு - 167

செங்கல்லால் கட்டப்பட்ட நெடிய சுவர்களை கொண்ட விட்டம் வீழ்ந்ததனால் அங்கிருந்த மணிப்புறாக்கள் போய்விட்ட மரத்தாலான மாடத்தில் எழுத்தாணி கொண்டு வரையப்பட்ட கடவுளும் போய்விட்டதனால் வழிபாடு மறந்த மெழுகி சுத்தம் செய்யப்படாத திண்ணைகளையுடைய அம்பலம் என்று இடிந்து காணப்பட்ட செங்கல்லால் கட்டப்பட்ட கோவிலை குறிப்பிடுகிறார்.

மண்டகப்பட்டு என்னும் ஊரில் காணப்படும் வடமொழி சாசனம் ஒன்றிலிருந்து பழங்காலத்தில் செங்கல் மரம், சுண்ணாம்பு போன்றவற்றால் கோவில்கள் கட்டப்பட்டன என்பதை அறிந்துகொள்ள இயலும்.

'செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை

இல்லாமலே பிரம, ஈசுவர, விஷ்ணுக்களுக்கு

விசித்திர சித்தன் என்னும் அரசனால் இக்கோயில்

அமைக்கப்பட்டது.''

இதிலிருந்து செங்கல், சுண்ணாம்பு, மரம் , உலோகம் முதலியவற்றைக் கொண்டு கோயில் கட்டடங்களை அமைக்கும் பழைமையான முறையை மாற்றி , அப்பொருள்கள் இல்லாமலே கருங்கல்லை குடைந்து மும்மூர்த்திகளுக்குப் பாறையில் கோயிலை அமைத்தான் விசித்திரசித்தன் எனும் முதலாம் மகேந்திரவர்மன் என்பது தெளிவாகிறது. இதன் மூலமாக கி.பி. ஆறாம் நுற்றாண்டிற்கு பின்னரே கல்லில் கட்டிடங்கள் கட்டும் நடைமுறை பழக்கத்துக்கு வந்துள்ளது, அதற்கு முன்னர் செங்கல் கட்டிடங்கள் மட்டுமே இருந்துள்ளன.

வீடுகளில் ஓவியங்கள்

சங்ககால தமிழர்கள் தங்களின் வீடுகளில் ஓவியங்கள் இடம்பெறுவதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் இதனை நன்னூல் பின்வருமாறு குறிபிடுகிறது.

மாடக்குச் சித்திரமு மாநகர்க்கு கோபுரமும்
நன்னூல், நூற்பா-55

மனிதர்களின் மாடமாகிய வீட்டிற்கு சித்திரங்களும் மாநகர்களுக்கு கோபுரங்களும் அடையாளமாக திகழ்ந்ததை நன்னூல் குறிப்பிடுகின்றது. இதன் மூலம் வீடுகளில் ஓவியங்கள் கட்டாயம் இடம்பெறும் என்பதை அறிந்து கொள்ள இயலும்.

வீடுகளில் மகளிர் வண்ணங்களை பயன்படுத்தி ஓவியம் தீட்டிக் கொண்டிருக்கும் பொழுது வீட்டிற்கு வெளியே தெருவில் நிகழ்ந்த நிகழ்வின் ஆரவாரம் காரணமாக தாங்கள் செய்து கொண்டிருந்த ஓவியங்களை அவ்வாறே போட்டுவிட்டு வீட்டின் வாசலை வந்து பற்றினார்கள் என்று வீடுகளில் பெண்கள் ஓவியம் தீட்டிக் கொண்டிருக்க கூடிய நிகழ்வை குணமடையார் குறிப்பிடுகின்றார்

''வட்டிகை மணிப்பலகை வண்ணநுண் துகிலிகை
இட்டிடை நுடங்கநொந் திரியலுற்ற மஞ்ஞையில்
கட்டழ லுயிர்ப்பின்வெந்து கண்ணிதீந்து பொன்னுக
மட்டவிழ்ந்த கோதைமார்கள் வந்துவாயில் பற்றினார்.''

குணமாலையார்., 259

காவிரிப்பூம் பட்டினத்தில் சுடு மண்ணால் (செங்கல்லால்) கட்டப்பட்ட வீடுகளின் வெளிப்புறத்தில் பூசப்பட்ட வெண்சுதையில் ஓவியங்கள் வரையப் பட்டிருந்தன. இவற்றில் வானவர் முதலிய பலவகை உயிர்களின் உருவங்கள்
ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தன. அவ்வழியே சென்ற மக்கள் கண்ணைக் கவர்ந்த அவ்வோவியங்களைக் கண்டு மகிழ்ந்து நின்று கொண்டிருந்தனர் என்று மணிமேகலை குறிப்பிடுகிறது.

வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங் கண்டுநிற் குநரும்
(மணிமேகலை. 3 : 126 - 131)

சங்ககால வீடுகளில் ஓவியங்கள் வரையும் பழக்கம் இருந்தது அதுபோல வீட்டில் பெண்களும் ஓவியம் வரைந்தார்கள் என்பதை அறிந்துகொள்ள இயல்கிறது.

அரண்மனைகளில் ஓவியங்கள்

சங்க இலக்கியமான பத்துப்பாட்டு பாடல்களில் ஒன்றான நெடுநல்வாடையில் அதன் ஆசிரியர் நக்கீரர் அவர்கள் மதுரை பாண்டிய அரசரான தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் அரண்மனையை வர்ணிக்கும் பொழுது மலையை போன்று உயர்ந்த தோற்றம் கொண்ட அறையில் வெள்ளியைப் போன்று வெண்சுதை பூசப்பட்ட சுவர் செம்பைப் போன்று உறுதியாக காணப்பட்டது,

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அதில் செடிகள், கொடிகள் மலர்கள் போன்றவை வரையப்பட்டிருந்தன என்று அரண்மனையில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததை குறிப்பிடுகின்றார்.

வெள்ளி யன்ன விளங்கும் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்
(நெடுநல்வாடை. 110 - 114)

பாண்டிய அரசியின் படுக்கை அறையின் விதான சுவர்களில் மேட ராசி முதலான ராசிகளின் உருவங்களும் சந்திரனோடு அவனது காதலி உரோகினி சேர்ந்திருக்கும் காட்சியும் வரையப்பட்டிருந்தது. அதனைப் பார்த்த பாண்டியமாதேவி உரோகினியை போல் தானும் தனது கணவருடன் இணைந்து இருக்க இயலவில்லையே என வருத்தப்பட்டதாக நக்கீரர் கூறுகிறார். இதிலிருந்து அரண்மனையின் படுக்கையறை விதான சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததை அறிந்து கொள்ள இயலும்.

புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்நிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனோடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
(நெடுநல்வாடை. 159 - 163)

சோழப் பேரரசன் அரண்மனையின் வெளிப்புறச் சுவர்களில் ஓவியம் வரையப்பட்டிருந்ததை கடலூர் உருத்திரங் கண்ணனார் பட்டினப்பாலையில் தெரிவிக்கிறார். காவிரி பூம்பட்டினத்தில் சாலையில்சென்ற தேர்களினால் சேரும் சகதியும் தூசியும் கிளம்பி சோழர் அரண்மனையின் வெளிப்புறச் சுவர்களின் மீது வரையபட்டிருந்த ஓவியங்களின் மீது படிந்திருந்தன என்றும் இது பார்பதற்கு சகதியில் புரண்ட யானை போல இருந்தது என்றும் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து சோழர் கால அரண்மனை வெளிப்புற சுவர்களிலும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன என்பது அறிந்து கொள்ள இயல்கிறது.

தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும்
(பட்டினப்பாலை. 47 - 50)

விசையை என்னும் அரசி , தனக்குச் சுடுகாட்டிலே உதவி செய்த ஒரு பெண் தெய்வத்தின் உருவத்தையும், தான் ஏறிச் சென்ற மயில்பொறி விமானத்தின் உருவத்தையும் அரண்மனைச் சுவரிலே ஓவியமாக வரைந்த செய்தியைத் திருத்தக்கதேவர் கூறுகிறார்:

''தனியே துயருழந்து தாழ்ந்து
வீழ்ந்த சுடுகாட்டுள்
இனியாள் இடர்நீக்கி ஏமஞ்
சேர்த்தி உயக்கொண்ட
கனியார் மொழியாட்கும் மயிற்கும்
காமர் பதிநல்கி
முனியாது தான்காண மொய்கொள்
மாடத் தெழுதுவித்தாள்.''

முத்தி இலம்பகம், 5.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இதிலிருந்து அரண்மனையை அலங்கரிக்கவும் மக்கள் கண்டுகளிக்க வெளிப்புற சுவர்களிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன என்பதை அறிந்துகொள்ளஇயலும்.

கோவில்களில் ஓவியங்கள்

தமிழர்களின் திணைக்கடவுளான முருகனுக்கு திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள கோயிலில் காணப்பட்ட சித்திர சாலையில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. திருப்பரங்குன்றத்தில் இரதி மன்மதனின் உருவங்கள் மற்றும் கௌதமனின் மனைவி அகலிகை மீது மோகம் கொண்டு இந்திரன் பூனை வடிவில் வந்து கௌதமன் வீட்டில் நுழைந்தது, நறையழிந்த அகலிகையின் கோலம், கௌதம முனிவர் கோபத்தால் அகலிகையை கல்லாகியது போன்ற ஓவியங்கள் திருபருத்திகுன்றம் எழுத்துநிலை மண்டபத்தில் இடம் பெற்றிருந்தது. இதனை கோயிலுக்கு வந்த பக்தர்கள் கண்டு களித்து ஐயங்களை கேட்டு தெரிந்து கொண்டனர் என்று பரிபாடல் குறிப்பிடுகிறது. இதன் மூலம் கோயில்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன என்பதை அறிந்து கொள்ளலாம்.

"நின் குன்றத்து
எழுதெழில் அம்பலங் காமவேள் அம்பின்
தொழில் வீற்றிருந்த நகர்."

வஞ்சி மாநகரில் புத்தத் துறவிகள் இருக்கும் தவச்சாலையில் ஓவியம் வரையப் பட்டிருந்ததாக மணிமேகலை குறிப்பிடுகிறது.

சாலையும் கூடமும் தமனியப் பொதியிலும்
கோலங் குயின்ற கொள்கை யிடங்களும்
(மணிமேகலை. 28 : 66 - 67)

முடிவுரை

சங்க காலத்தில் தமிழர்கள் பயன்பாட்டின் அடிப்படையாக கொண்டு பல்வேறு வகையான கட்டிடங்கள் கட்டியுள்ளார்கள் அவைகளில் ஓவியங்கள் வரைந்து அழகுபடுத்தியுள்ளார்கள். குறிப்பாக மக்களின் தங்குமிடங்களான வீடுகளிலும் அரனமனைகளிலும் வழிபாட்டுத்தலமான கோவில்களிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. சங்ககால கட்டிடங்கள் மரம், சுதை, செங்கல் போன்ற அழியும் பொருள்களினால் கட்டப்பட்டவை எனவே அக்கால ஓவியங்கள் காணக்கிடைக்கவில்லை. நம்மிடம் காணப்படும் சுவரோவிய தொடர்சியை வளர்ச்சியடைய செய்வதற்கு தற்போது காணப்படும் கட்டிடங்களான வீடுகள், கோவில்கள், அரசு அலுவலகங்கள் போன்ற அனைத்துவகையான கட்டிடங்களிலும் ஓவியங்கள் இடம்பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

பார்வை நூல்கள்

1. தெய்வநாயகம் . கோ, தமிழர் கட்டிடக்கலை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட். , சென்னை - 600 098.

2. இராசு பவுன் துரை, தமிழக நாட்டுப்புறக் கட்டடக்கலை மரபு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. தட்சிணாமூர்த்தி. அ , தமிழர் நாகரீகமும் பண்பாடும் , யாழ் வெளியீடு , சென்னை - 600 040.

4. பாலசுப்பிரமணியன் கு.வெ., புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். , சென்னை - 600 098.

5. பாலசுப்பிரமணியன் கு.வெ., சங்க இலக்கியம் பத்துப்பாட்டு முழுமையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை - 600 098.

6. அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்